# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க,

# உண்ணாட்டரசிறை (திருத்த) ச் சட்டம்

---

*[1984, ஏப்ரில் மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---


*1984, ஏப்ரில் மாதம் 27 ஆந் தேதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை: ரூபா 2.10* *தபாற் செலவு: சதம் 90*

# 1984 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்த)ச் சட்டம்

[1984, ஏப்ரில் மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 61/83
1614

## 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1984 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலம் ;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் :—

"(ஈ) தொழில்தருநரால் வாடகையின்றி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் வதிவிடத்தின் வாடகைப் பெறுமதி அல்லது வாடகைப் பெறுமதிக்குக் குறைவான வாடகையொன்றில் வதிவிடமொன்று தொழில்தருநரால் ஏற்பாடுசெய்யப்படுமிடத்து, அத்தகைய வாடகையிலும் வாடகைப் பெறுமதி எத்தொகையாற் கூடுகிறதோ அத்தொகை.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக ஏதேனும் வதிவிடத்தின் வாடகைப் பெறுமதியானது—

(i) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தி மூன்றும் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கென, 5 ஆம் பிரிவில் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறான தேறிய ஆண்டுப் பெறுமதியும், சொந்தக்காரரால் செலுத்தப்பட்ட வீதவரிகளும், பழுதுபார்த்தல்களுக்கும் வேறு செலவுகளுக்குமாக அத்தகைய தேறிய ஆண்டுப் பெறுமதியின் முப்பத்து மூன்றெடு மூன்றிலொரு சதவீதமும் சேர்ந்த தொகையாதல் வேண்டும் ; அத்துடன்

(ii) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தி நாலாம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கென்—

(அ) விடயம் (i) என்பதற்கிணங்கக் கணிக்கப்பட்ட தொகை ; அல்லது

(ஆ) அத்தகைய வதிவிடத்திற்கெனச் செலுத்தப்பட்ட மொத்த வாடகை,

இவற்றுள் எது கூடியதோ அத்தொகையாதல் வேண்டும்: ஆயின்—

(i) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தி மூன்றும் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கென, (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியிலும் (ஆ) என்னும் பந்தியிலும் விபரிக்கப்பட்டுள்ள இலாபங்களின் பதினைந்து சதவீதத்தை அல்லது பதினையாயிரம் ரூபாவை, இவற்றுள் எது குறைந்ததோ அதையும், அத்துடன்

(ii) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தி நாலாம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கென, (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியிலும் (ஆ) என்னும் பந்தியிலும் விபரிக்கப்பட்டுள்ள இலாபங்களின் இருபத்தைந்து சதவீதத்தை அல்லது நாற்பத்தெட்டாயிரம் ரூபாவை, இவற்றில் எது குறைந்ததோ அதையும்

விஞ்சுகின்ற மேலதிக வாடகைப் பெறுமதி எதுவும் கவனத்தில் கொள்ளப்படலாகாது; " ; அத்துடன்

(3) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை அடுத்து பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் :—

'(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக ஏதேனும் நன்மையைப் பெற்றுள்ள அல்லது கிடைக்கப் பெற்றுள்ள தனியாளொருவர் தொடர்பில், " ஏதேனும் நன்மையின் பெறுமதி " என்பது,—

(அ) அத்தகைய நன்மையின் சந்தைப் பெறுமதி உடனடியாக நிச்சயிக்கப்படக்கூடியதாயிருக்குமிடத்து, அத்தகைய சந்தைப் பெறுமதி எனவும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய நன்மையின் சந்தைப் பெறுமதி உடனடியாக நிச்சயிக்கப்படக்கூடியதாக இல்லாதவிடத்து அல்லது அத்தகைய நன்

மையானது சந்தைப் பெறுமதியெதனையும் கொண்டிராதவிடத்து, அத்தகைய நன்மையைப் பெறுவதற்கு வேறெவரேனும் தனியாளினால் எச்செலவு உறப்படக்கூடுமோ அச் செலவு எனவும்,

பொருளாகும் :

ஆயின், ஆணையாளர் தலைமையதிபதி, அந்த நன்மையின் சந்தைப் பெறுமதியை அல்லது அந்த நன்மையைப் பெறுவதற்கு வேறெவரேனும் தனியாளினால் எச்செலவு உறப்படக்கூடுமோ அச்செலவைக் கவனத்திற்கொண்டு, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், ஏதேனும் நன்மையின்பொருட்டு குறிக்கப்படவுள்ள பெறுமதியைக் குறித்துரைக்கலாமென்பதுடன், நன்மையொன்று தொடர்பில் பெறுமதியொன்று அவ்வாறு குறித்துரைக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய பெறுமதியானது அத்தகைய நன்மையின் பெறுமதியாகக் கருதப்படுதலும் வேண்டும்.'.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் " கொழும்புத் திட்டப் பணியகத்தினால் " என்னும் சொற்களுக்குப் பதிலாக, " கொழும்புத் திட்டப் பணியகத்தினால் அல்லது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் " என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

" (உ) இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரத்துடன் வர்த்தக வங்கி எதிலும் எவரேனும் ஆளினால் அல்லது அவர் சார்பில் திறக்கப்பட்ட ஏதேனும் கணக்கில், வெளிநாட்டு நாணயத்தில் அவரின் வரவிலுள்ள பணங்கள் மீது, எந்தக் காலப்பகுதியின் போது அவர் இலங்கைக்கு வெளியேயிருந்தாரோ அந்தக் காலப்பகுதிக்கெனவும் எத்தேதியன்று அவர் இலங்கையை வந்தடைந்து இலங்கையில் வதிபவராக ஆகின்றாரோ அத்தேதியை உடனடுத்துப் பின்னுறுகின்ற ஆறு ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதிக்கெனவும் அவருக்குச் சேருகின்ற வட்டியும் ;".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், " 17 ஆம், 18 ஆம், 19 ஆம், 20 ஆம், 21 ஆம் " என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, " 17 ஆம், 17அ ஆம், 18 ஆம், 19 ஆம், 20 ஆம், 20அ ஆம், 21 ஆம் " என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் "ஏற்றுமதி அபி விருத்தி நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏற்றுமதி அபிவிருத்தி நிதி யத்திலிருந்து வழங்கப்பட்ட ;" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ; அத்துடன்

(ஆ) அப்பந்தியின் இறுதியில், பின்வரும் பந்தியைச் சேர்ப் பதன் மூலம் :—

"(எ) வேறேதேனும் கமத்தொழில் விளையுளின் நடு கைக்கான அல்லது மீள்நடுகைக்கான வேறே தேனும் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட".

முதன்மைச் சட்ட வாக்கத்தில் 17அ என்னும் புதிய பிரிவை உட்புகுத் துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்ற தென்பதுடன், இது அச்சட்ட வாக்கத்தின் 17அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"1983, நவம்பர் 17 ஆந் தேதி யன்று அல்லது அதன்பின்னர் தொழிலைத் தொடங்கும் குறித்த சில கம் பெனிகளின் இலாபங்களும் வருமானமும் ஐந்து ஆண்டு களுக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படு தல்.

17அ. (1) மூன்றும் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட, ஏதேனும் கம்பெனியின், (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொறுப்புமுயற்சியிலி ருந்து கிடைக்கப்பெறும் (மூலதனச் சொத்துக் களின் விற்பனையிலிருந்து பெறப்படும் வை யேனும் இலாபங்களும் வருமானமும் தவிர்ந்த) இலாபங்களும் வருமானமும், அப்பொறுப்பு முயற்சி எத்தேதியன்று தொழிலைக் கொண்டு நடாத்தத் தொடங்கியதோ அத்தேதியிலிருந்து கணக்கிடப்படும் ஐந்து ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றைக் கொண்டதான அத் தகைய காலப்பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், 1983 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆந் தேதி யன்று அல்லது அதன் பின்னர் தொழிலைக் கொண்டுநடாத்தத் தொடங்கியதும் பின்வரும் கம்பெனியாக, அமைச்சரால் கசெற்றில் வெளி யிடப்படும் கட்டளைமூலம் அங்கீகரிக்கப்பட்டது மான ஏதேனும் கம்பெனிக்கு ஏற்புடையன வாதல் வேண்டும்:—

(அ) இதனகத்துப் பின்னர் குறித்துரைக்கப்பட் டுள்ள பொறுப்பு முயற்சிகளுள் ஒன்றை அல்லது பலவற்றைக் கொண்டுநடாத்து வதில் மட்டுமே ஈடுபட்டுள்ளதான ஒரு கம்பெனி, அவையாவன:—

(i) விலங்கு வேளாண்மைக்கான பொறுப்பு முயற்சியொன்று ;

(ii) கரும்புப் பயிர்ச்செய்கைக் கான பொறுப்புமுயற்சியொன்று ;

(iii) கடல் அல்லது உண்ணுட்டு கடற்றொழில்களுக்கான பொறுப்புமுயற்சி யொன்று ;

(iv) முற்போந்த உட்பந்திகளுள் எவற்றி லேனும் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் செயற்பாட்டினைக் கொண்டு நடாத்துவதற்கும் அத்தகைய செயற் பாட்டின் விளையுளைப்பதனிடுவதற்கு மான பொறுப்பு முயற்சியொன்று ;

(v) அமைச்சரால் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப் படும் கட்டளைமூலம் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய விற் பனைப்பொருட்களை உற்பத்திசெய் வதற்கான ஊக்குவிப்புக்களை ஏற் பாடுசெய்வதன் அவசியத்தைக் கவனத்திற்கொண்டு, அத்தகைய விற்பனைப்பொருட்களை இலங்கையின் ஏதேனும் கமத்தொழில் விளையுள் ளிலிருந்து உற்பத்தி செய்வதற்கான பொறுப்புமுயற்சியொன்று ;

(ஆ) ஏற்றுமதி உற்பத்திக்கிராமக் கம்பெனியா கவுள்ள ஒரு கம்பெனி.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "ஏற்று மதி உற்பத்திக்கிராமக் கம்பெனி" என்பது—

(அ) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத் திரண்டாம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கருத்தெல்லைக் குள் மக்கள் கம்பெனியொன்றாகவுள்ள;

(ஆ) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொ ன்பதாம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏற்று மதி அபிவிருத்திச் சபையை அத்துடன் அக்கம்பெனியால் உற்பத்திசெய்யப் படும் எவையேனும் விளையுள்களின் உற்பத்தியாளர்களை அதன் பங்கு தாரர்களாகக் கொண்டிருக்கின்ற ; அத்துடன்

(இ) அக்கம்பெனியால் அல்லது பண்டங்களை அல்லது விற்பனைப் பொருட்களை ஏற்று மதி செய்வதில் ஈடுபட்டுள்ள வேறே

தேனும் கம்பெனியினூடாக அதன் விளையுள்களை ஏற்றுமதி செய்கின்ற, கம்பெனியொன்றெனப் பொருளாகும் :

ஆயின், இப்பிரிவானது, 1983 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆந் தேதிக்குமுன்னர் தொழிலைக் கொண்டுநடாத்தத் தொடங்கியிருந்த பொறுப்புமுயற்சியொன்றைக் கொண்டு நடாத்தும் ஏதேனும் கம்பெனிக்கு அல்லது 1983 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆந் தேதிக்கு முன்னர் உளதாயிருந்த ஏதேனும் தொழிலை வெவ்வேறாக்குவதன் மூலம் அல்லது மீளநிருமாணிப்பதன் மூலம் அமைக்கப்பட்ட ஏதேனும் கம்பெனிக்கு ஏற்புடையதாதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 20அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவானது, இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது இச்சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

" குறித்த சில பொறுப்பு முயற்சிகளின் ஏற்றுமதி இலாபங்களும் வருமானமும் 1984, எப்பிறில் 1 ஆந் தேதியிலிருந்து 1989 மார்ச் 31 ஆந் தேதிவரை வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல்.

20 அ. (1) மூன்றும் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள், ஏதேனும் பொறுப்புமுயற்சியின் ஏற்றுமதி இலாபங்களையும் வருமானத்தையும் கொண்டதான, அப்பொறுப்புமுயற்சியினது (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்து பெறப்படும் எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர்ந்த) இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகமானது, 1984 ஆம் ஆண்டு எப்பிறில் மாதம் 1 ஆந் தேதி தொடங்கி 1989 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆந் தேதி முடிவடையும் காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவில்—

" ஏற்றுமதி இலாபங்களும் வருமானமும் " என்பதும் " மொத்த விற்பனை வரவு " என்பதும், 20 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவற்றுக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள அவ்வப் பொருளைக் கொண்டவையாகும் ;

"ஏற்றுமதி விற்பனை வரவு" என்பது, பொறுப்புமுயற்சியொன்று தொடர்பில் பயன்படுத்தப்படும்போது அப்பொறுப்பு முயற்சியால் பின்வருவனவற்றிலிருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான மொத்தத்தொகை எனப் பொருளாகும்:-

(i) பொருட்களினதும் பண்டங்களினதும் ஏற்றுமதி, அல்லது

(ii) வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவையுடைய சேவைகளைப் புரிதல்; அத்தகைய சேவைகள், கப்பல் திருத்தம்செய்தல், கப்பல் உடைத்தல், கடல்வழிச் சரக்குக் கொள்கலன்களைத் திருத்தம்செய்தலும் புதுக்குதலும் கணனி மென்பொருள் ஏற்பாடு, கணனி நிகழ்ச்சித் தயாரிப்பு, கணனி முறைமைகள், அல்லது கணனித் தரவுபதிதல் என்பனவாம்; ஆனால் இவை பின்வருவனவற்றை உள்ளடக்கா :—

(அ) மூலதனச் சொத்துக்களின் விற்பனையின் மூலம் பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான ஏதேனும் தொகை;

(ஆ) இரத்தினக்கற்களின் விற்பனையின் மூலம் பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான ஏதேனும் தொகை;

(இ) தொகையான கருந்தேயிலை, கிறேப்பு இறப்பர், தாளுருவ இறப்பர், கழிவு இறப்பர், தேங்காயெண்ணெய், உலர்த்திய தேங்காய, கொப்பரு, தேங்காய் அலலது தென்னந்தும்பு எனபதன் ஏற்றுமதியிலிருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான ஏதேனும் தொகை ;

(ஈ) எந்தத் தைத்த உடைகள் தொடர்பில், புடவைக் கைத்தொழில்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினது அமைச்சின் செயலாளரினால் ஏற்றுமதிக்கான பங்களவொன்று ஒதுக்கப்பட்டுள்ளதோ அந்தத் தைத்த உடைகளின் ஏற்றுமதிக்கான பொறுப்பு முயற்சியொன்றின் விடயத்தில், தைத்த உடை

களின் ஏற்றுமதியிலிருந்து பெறப்பட்ட அல்லது பெறப் படற்பாலதான, அப்பங்களை விஞ்சாத ஏதேனும் தொகை ;

(உ) மூன்றும் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள்ளான இலாபங்களும் வருமானங்களும் அல்லாத எவையேனும் இலாபங்களும் வருமானமும்.

(3) பொறுப்புமுயற்சியொன்றின் ஏற்றுமதி இலாபங்களும் வருமானமும், 20 (1) என்னும் பிரிவின்கீழ் வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருப்பின் இப்பிரிவானது அப்பொறுப்புமுயற்சிக்கு அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கென ஏற்புடையதாதலாகாது.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஈஈ என்னும் பிரிவைத் திருத்துதல்.**

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஈஈ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரின் (1) ஆம் உட்பிரிவின் (i) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் :—

"(i) 1983 ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1984 ஏப்பிறில் 1 ஆந் தேதிக்கு முன்னர் கூட்டிணைக்கப்பட்டதும்—

(அ) அரசினால் ; அத்துடன்

(ஆ) ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால்

பணமாகவோ வேறு வகையாகவோ உதவுதொகையளிக்கப்பட்ட அதன் மூலதனத்தில் தொண்ணூற்றைந்து சதவீதத்துக்குக் குறையாத அளவு மூலதனத்தைக் கொண்டதுமான ; அத்துடன் " ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் :—

"(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டவையான கம்பெனியொன்றின் இலாபங்களும் வருமானமும் 1984 மார்ச்சு 31 ஆந் தேதியன்று உள்ளவாறான, அக்கம்பெனியின்

வழங்கப்பட்ட மூலதனத்தின் இருமடங்கிற்குச் சமமான பணத் தொகையொன்ருக இருக்கும்போது அவ்வுட் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட விலக்களிப்பு இல்லா தொழிதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் (ஙா) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன் மூலம் :—

"(ச) அத்தகைய ஆளின் ஊழியரொருவருக்கு அல்லது அத்தகைய ஊழியரின் வாழ்க்கைத் துணைக்கு, பிள்ளைக்கு அல்லது பெற்ருேருக்கு ஏதேனும் வதிவிடத்தை ஏற்பாடுசெய்வதில் 1984 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கென அத்தகைய ஆளினுல் உறப்பட்ட ஏதேனும் செலவினத்திலிருந்து, 4 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குட்பட்ட அத்தகைய ஊழியரின் ஊழியத்திலிருந்து பெறப்படும் இலாபங்களில் உள்ளடக்கப்பட்டதான அத்தகைய வதிவிடத்தின் வாடகைப் பெறுமதியைக் கழிப்பதன்மூலம் பெறப்படும் விஞ்சுதொகையின் அரைவாசி ; அத்துடன்

(ஞ) ஏதேனும் வாகனம், பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி, பொருத்துகை அல்லது சாதனம் தொடர்பில் ஏதேனுமாண்டில் 1984 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் அவரால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின்கீழ் அவரால் செலுத்தப்பட்டதும், அத்தகைய உடன்படிக்கையின்கீழ் செலுத்தப்படற்பாலதான மொத்த வாடகையின் நான்கிலொரு பங்குக்குச் சமமாகவுள்ள ஒரு தொகையை விஞ்சுகின்றதாகவுள்ளதுமான வாடகையின் அத்தகைய பாகம்.";
அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலம்:—

"(2) ஏதேனும் வியாபாரத்தை அல்லது தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற அல்லது ஏதேனும் உயர்தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலைப் புரிகின்ற ஆளெவரும்—

(அ) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு—

(i) அத்தகைய ஆளின் கீழ் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளவரும் ஒரு நிறைவேற்று அலுவலரல்லாதவருமான அலுவலரொருவரால், அவரது வியாபாரத்தின், தொழிலின், உயர் தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட ஒரு மோட்டார் துவிச்சக்கரவண்டி அல்லது ஒரு துவிச்சக்கரவண்டி தொடர்பில் தவிரவும்; அத்துடன்

(ii) அத்தகைய ஆளின் ஊழியர்களை அவர்களின் வேலைத்தலத்துக்கு அல்லது வேலைத்தலத்திலிருந்து எடுத்துச்செல்வதற்கெனப் பயன்படுத்தப்பட்ட ஒரு மோட்டார் கோச்சு தொடர்பில் தவிரவும்,

அத்தகைய நோக்கத்திற்கெனப் பயணஞ் செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் வாகனம் தொடர்பில் ; அத்துடன்

(ஆ) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து நாலாம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, அத்தகைய ஆளின் எவரேனும் அலுவலர் அல்லது தொழில்பெறுநரின் பயன்பாட்டுக்கென, அத்தகைய அலுவலரின் அல்லது ஊழியரின் வதிவிடத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட ஏதேனும் பொறித் தொகுதி, எந்திரம், பொருத்துகைகள்,

சாதனம் அல்லது பொருட்கள் தொடர்பிலும், சேதாரத்துக்கும் தேய்மானத்துக்குமான மதிப்பிறக்கத்துக்கான அல்லது புதுப்பித்தலுக்கான ஏதேனும் பணத் தொகைக்கு அல்லது 23 (1) (அ) என்னும் பிரிவின் கீழான அல்லது 23 (1) (உ) என்னும் பிரிவின்கீழான, அல்லது 23 (1) (ஊ) என்னும் பிரிவின் கீழான ஏதேனும் விடுதொகைக்கு அல்லது (அ) என்னும் பந்தியிலும் (ஆ) என்னும் பந்தியிலும் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் வாகனம், பொறித்தொகுதி, எந்திரம், பொருத்துகைகள், சாதனங்கள் அல்லது பொருட்கள் தொடர்பிலான ஏதேனும் வாடகை அல்லது ஆண்டுக் கொடுப்பனவுக்கான ஏதேனும் கழிவுக்கு உரித்துடையவராதலாகாது.".

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "16அ என்னும் பிரிவின்கீழ் அல்லது 22அ என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "16 அ என்னும் பிரிவின்கீழ் அல்லது 17அ என்னும் பிரிவின்கீழ் அல்லது 22அ என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (4அ) என்னும் உட்பிரிவில், "20 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில்" என்னும் சொற்களும் எண்களும் எங்கெல்லாம் இடம்பெறுகின்றனவோ அங்கெல்லாம் அத்தகைய சொற்களுக்கும், எண்களுக்கும் பதிலாக "20 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் அல்லது 20அ என்னும் பிரிவில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் :—

"(அ) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆந் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் அவ்வரிமதிப்பீட்டாண்டினையடுத்துப் பின்னுறும் ஒவ்வொரு நான்கு வரிமதிப்பீட்டாண்டுகளுக்கெனவும் பன்னிரண்டாயிரம் ரூபா விடுதொகையொன்று ;"; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை யுடனடுத்து, பின்வரும் பந்தியை உட்புகுத் துவதன்மூலம் :—

"(அஅ) ஆயிரத்துத் தொளாயிரத்து எண் பத்துநாலாம் ஆண்டு எப்பிறில் மாதம் 1 ஆந் தேதியன்று அல் லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் பதினெட்டாயிரம் ரூபா விடுதொகையொன்று, அத் துடன்"; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவிற்குரிய காப்புவாசகத்தின் (ஆ) என் னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் ;—

"(ஆ) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன் பதாம் ஆண்டு எப்பிறில் 1 ஆந் தேதி யன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் அவ்வரிமதிப்பீட்டாண்டி னையுடனடுத்துப் பின்வரும் ஒவ்வொரு நான்கு வரிமதிப்பீட்டாண்டுகளுக்கெனவும் பன்னிரண்டாயிரம் ரூபா விடுதொகை யொன்று ;"; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவிற்குரிய காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந் தியை உட்புகுத்துவதன் மூலம் :—

"(இ) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்துநா லாம் ஆண்டு எப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதே னும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் பதி னெட்டாயிரம் ரூபா விடுதொகையொன்று.".

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவானது இத் தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியில் "தனி ஆள் ஒருவரினால் செலுத்தப்பட்ட கட்டுப்பணங்கள் எவையும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தனி ஆள் ஒரு வரினால், 1983 ஆம் ஆண்டு எப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கெனச் செலுத்தப்பட்ட கட்டுப்பணங் கள் எவையும்;" என்னும் சொற்களையும் இலக்கங்களை யும் இடுவதன்மூலம் ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலம் :—

"(எஎ) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து நாலாம் ஆண்டு எப்பிறில் 1 ஆந்

தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கென—

(i) தனிக்கொடையுரிமைக் காப்புறுதிப் பூட்கையொன்றல்லாத, எந்த ஆயுட் காப்புறுதிப் பூட்கையொன்றின் மீது, ஆகக் குறைந்தது ஐந்து ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்குமேல் ஆண்டுக் கட்டுப்பணம் செலுத்தப்படற்பாலதாகவுள்ளதோ அந்த ஆயுட்காப்புறுதிப் பத்திரத்தின் மீதான ;

(ii) எந்த ஆண்டுத் தொகையொன்றினைக் கொள்வனவு செய்வதற்கான, ஆண்டுக் கட்டுப்பணம் ஆகக்குறைந்தது ஐந்து ஆண்டுகளைக்கொண்ட காலப் பகுதியொன்றுக்குமேல் செலுத்தப் படற்பாலதாகவுள்ளதோ அந்த ஆண்டுத் தொகையினைக் கொள்வனவு செய்வதற்கான ;

(iii) மருத்துவக் காப்புறுதிப் பூட்கையொன்றின் மீதான ;

(அ) இலங்கைக்கு வெளியே, 1957 ஆம் ஆண்டு யூலை மாதம் 4 ஆந் தேதிக்குப் பின்னர் வழங்கப்பட்ட ஏதேனும் பூட்கை தொடர்பில், அல்லது

(ஆ) இலங்கைக்கு வெளியே, 1957 ஆம் ஆண்டு யூலை மாதம் 4 ஆந் தேதிக்குப் பின்னர் ஆண்டுத் தொகையொன்றினைக் கொள்வனவு செய்வதற்கென,

கொடுப்பனவுக்கெனப் போமதியாகச் சேர்ந்துள்ள கட்டுப் பணமாகவுள்ள, இலங்கைக்கு வெளியே செலுத்தப்பட்ட கட்டுப்பணம் அல்லாத கொடுப்பனவு செய்யப்பட்ட கட்டுப் பணங்கள் எவையும் ;"; அத்துடன்

(இ) அந்த உட்பிரிவின் (ங) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலம் :—

"(ச) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திமூன்றும் ஆண்டு ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டுக்கென இருபத்தைந்து வயதுக்குக் கீழ்ப்பட்ட திருமணமாகாத பிள்ளையொருவரின், இலங்கைக்கு வெளியேயான கல்வி சம்பந்தமாக தனியாளொருவரினால் செலவிடப்பட்ட ஏதேனும் தொகை ; அத்தகைய கல்வியானது,—

(அ) உயர்கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் அபிப்பிராயப்படி எந்த பட்டதாரிக் கல்விக்கு அல்லது பயிற்சி நெறிக்கு போதியளவு வசதிகள் இலங்கையில் கிடைக்கத்தக்கன வாகவில்லேயோ அந்தப் பட்டதாரிக் கல்வியாக அல்லது பயிற்சிநெறியாக இருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) பல்கலைக்கழகமொன்றிலான அல்லது பட்டப்பின் படிப்புக்கான வேறு நிறுவனத்திலான பட்டப்பின் படிப்பாக இருத்தல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில் "(ஈ) என்னும் பந்தியில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(ஈ), (க) என்னும் பந்திகளில்" என்னும் சொற்களை இடுக ;

(3) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவால் செய்யப்பட்ட திருத்தம், 1980 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல்வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில்—

(அ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில், "1980 எப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக" என்ற சொல்லமைப்பிற்குப் பதிலாக, "1980 எப்பிறில் 1 ஆந் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாகவும் அவ்வரிமதிப்பீட்டாண்டினை உடனடுத்துப் பின்னுறும் அடுத்த மூன்று வரிமதிப்பீட்டாண்டுகளுக்கெனவும்" என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலம் ; அத்துடன்

(ஆ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்து பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன்மூலம் :—

"(iii) 1984 எப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக, இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் IIஅ என்னும் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில் ;".

(2) ஓராம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய காப்புவாசகத்தை இடுவதன்மூலம் :—

"ஆயின், 67 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் கீழ் வதிவற்றவராகக் கருதப்படுகின்ற தனியாளொரு

வரால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியானது, அவரது வரி மதிப்பிடற்குரிய வருமானம் எந்தத் தொகையால்—

(i) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதாம் ஆண்டு எப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பிலும் அவ் வரிமதிப்பீட் டாண்டினை உடனடுத்துப் பின்னுறும் மூன்று வரி மதிப்பீட்டாண்டுகளுக்கெனவும் பன்னிரண்டாயிரம் ரூபாவையும் ; அத்துடன்

(ii) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தி நான்காம் ஆண்டு எப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கென பதினெட்டாயிரம் ரூபாவையும்

விஞ்சுகின்றதோ அந்தத் தொகைக்குக் கூடுதலாயிருத்தல் ஆகாது.".

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக் குரிய காப்பு வாசகத்தில், "1980 எப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கென " என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, " 1980 எப்பிறில் 1 ஆந் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கெனவும் அவ்வரிமதிப்பீட்டாண்டினையுடனடுத்துப் பின்னுறும் மூன்று வரிமதிப்பீட்டாண்டுகளில் ஒவ்வொன்றுக் கெனவும் " என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலம் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், " விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம் பெனி ஒன்று தவிர்ந்த கம்பெனி ஒன்றின் " என்னும் சொற்களுக்குப் பதிலாக, " கம்பெனியொன்றின் " என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவானது, அப் பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

"(ஈ) அப்பங்கிலாபம் 1980 எப்பிறில் 1 ஆந் தேதியன்று அல் லது அதன்பின்னர், ஆனால் 1984 எப்பிறில் 1 ஆந் தேதிக்கு முன்னர் விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பெனியொன்றினால் வெளிப்படுத்தப்பட்ட விடத்தும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஈ) இயைபான பங்கிலாபமானது, விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பெனியொன்றிடமிருந்து, 1980 ஏப்பிறில் 1 ஆந் தேதியன்றும் அல்லது அதன் பின்னரும் அத்துடன் 1984 மார்ச் 31 ஆந் தேதிக்கு முன்னரும், அத்தகைய வதிவுள்ள கம்பெனியால் பெறப்பட்ட பங்கிலாபத் தொகையிலிருந்து செலுத்தப்பட்டால், அத்தகைய இயைபான பங்கிலாபத் தொகையின் ஐந்து சதவீதத்துக்குச் சமமான வருமான வரியையும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்—

(அ) "விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பெனி ஒன்றல்லாததான வதிவுள்ள கம்பெனி ஒவ்வொன்றும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வதிவுள்ள கம்பெனி ஒவ்வொன்றும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ; அத்துடன்

(ஆ) "வருமான வரியையும் கழிக்க உரித்துடையதாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வருமானவரியையும் கழிக்க உரித்துடையதாதல் வேண்டும் :

ஆயின், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ள எதுவும், 1980 ஆம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1984 ஆம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆந் தேதிக்கு முன்னர், விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பெனி ஒன்றினால் வெளிப்படுத்தப்பட்ட பங்கிலாபமெதற்கும் ஏற்புடையனவாதலாகாது." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்குரிய காப்புவாசகத்தின் (இ) என்னும் பந்தியில்—

"விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பெனியிடமிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பெனியிடமிருந்து, 1980 ஆம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1984 ஆம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆந் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவை மாற்றீடுசெய்தல்.

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படு கின்றது :—

' செல்வவரிக்குப் பொறுப்பாதல்.

**41.** இவ்வத்தியாயத்தின் ஏனைய ஏற்பாடு களுக்கு அமைவாக—

(அ) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத் தொன்பதாம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட் டாண்டிற்கும் அவ்வரிமதிப்பீட்டாண்டினை யுடனடுத்துப் பின்னுறும் நான்கு வரி மதிப்பீட்டாண்டுகளில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் ஆளிடமும், அந்த வரிமதிப் பீட்டாண்டின் முதல் நாளன்றுள்ள வரி விதிக்கற்பாலதான செல்வம் தொடர் பாக ; அத்துடன்

(ஆ) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து நாலாம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆந் தேதி யன்று அல்லது அதன் பின்னர் தொடங் கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற் கும், ஒவ்வோர் ஆளிடமும் அந்த வரி மதிப்பீட்டாண்டின் இறுதி நாளன்றுள்ள வரிவிதிக்கற்பாலதான செல்வம் தொடர் பாக,

இச்சட்டத்திற்கான நான்காம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தோதான வீதங்க ளில் (இதன்கைத்துப் பின்னர் " செல்வ வரி " எனக் குறிப்பீடு செய்யப்படும்) வரியொன்று விதிக்கப்படல் வேண்டும். '.

முதன்மைச் சட்டவாக்கத்தின 45 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவானது, அப் பிரிவின் (ம) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது :—

"(ம) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டானது, எந்த வரிமதிப்பீட் டாண்டில், 10 ஆம் பிரிவின் (உ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறான, அத்தகைய ஏதேனும் கணக்கில் வைப்பிலிடப்பட்ட பணங்களிலிருந்து அத்தகைய ஆளுக்குத் திரளுகின்ற வட்டியானது அப்பந்தியின்கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதோ அந்த வரிமதிப்பீட்டாண்டொன்றாக இருந்து அத்தகைய கணக்கில் வைப்பிலிடப்பட்ட பணங்களுடன் அவற்றின் மீது சேருகின்ற வட்டியும் உள்ளடங்குவதாக அத்தகைய கணக்கில் அவரது வரவிலிடப்பட்டுள்ள பணங்கள்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவைத் திருத்துதல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஊ) அத்தகைய கொடையின் பெறுமதியானது அல்லது அந்த வரிமதிப்பீட்டாண்டில் ஒன்றுக்கு மேற்பட்ட கொடைகள் அளிக்கப்பட்டிருப்பின் அத்தகைய கொடைகளின் கூட்டுமொத்தப் பெறுமதியானது—

(i) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டில் அல்லது அடுத்துப் பின்னுறும் நான்கு வரிமதிப்பீட்டாண்டுகளில் ஏதேனுமொரு வரிமதிப்பீட்டாண்டில் அளிக்கப்பட்ட கொடையின் அல்லது கொடைகளின் விடயத்தில் இரண்டாயிரம் ரூபாவினை விஞ்சாதிருப்பின் அக்கொடை ; அத்துடன்

(ii) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து நான்காம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அளிக்கப்பட்ட கொடையின் அல்லது கொடைகளின் விடயத்தில், ஐயாயிரம் ரூபாவினை விஞ்சாதிருப்பின் அக்கொடை ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவைத் திருத்துதல்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1அ) அறுபத்தேழாம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின்கீழ் வதிவற்றவராகக் கருதப்பட்ட தனியாளொருவரின் வரிமதிப்பிடற்குரிய வருமானம், இலங்கையில் அளிக்கப்பட்ட சேவையிலிருந்து கிடைத்த வருமானத்தை மாத்திரம் கொண்டதாகவும்—

(i) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதாம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் அவ்வரிமதிப்பீட்டாண்டினை உடனடுத்துப் பின்னுறும் மூன்று வரிமதிப்பீட்டாண்டுகளுக்கெனவும் பன்னிரண்டாயிரம் ரூபாவையும் ; அத்துடன்

(ii) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து நான்காம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கென பதினெட்டாயிரம் ரூபாவையும்,

விஞ்சாததாயுமிருக்குமிடத்து அத்தகைய வருமானம் வரிவிதிக்கப்படற்பாலதாதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 92 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 92 ஆம் பிரிவானது, அப் பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், " பிரதி ஆணையாளர் முன்னர் காண்பிக்குமாறு அல்லது அவருக்கு அனுப்பிவைக்குமாறு தேவைப்படுத்தி அறிவித்தல் கொடுக்கலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, " பிரதி ஆணையாளர் முன்னர் காண்பிக்குமாறு அல்லது அவருக்கு அனுப்பிவைக்குமாறு ; " என்னும் சொற்களை இடுவதன்மூலம் ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

'(இ) அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள், அத்தகைய ஆளுக்கும் வேறெவரேனும் ஆளுக்கும் இடையிலான அல்லது அத்தகைய ஆளுக்கும் வகுப்பினரான ஆட்களுக்கும் இடையிலான எவையேனும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில், அந்த அறிவித்தலில் கோரப்படக்கூடியதான அத்தகைய தகவலைக் கொடுத்துதவுமாறு,

தேவைப்படுத்தி அறிவித்தல் கொடுக்கலாம்.

ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுமாறு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தும் அறிவித்தலொன்று இவ்வுட்பிரிவின் கீழ் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய தகவலைக் கொடுத்துதவுவதைத் தடைசெய்யும் வேறேதேனும் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும், அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, இவ்வுட்பிரிவில் "எவரேனும் ஆள் " என்பதன் குறிப்பீடானது, " வங்கியாளர் ஒருவர்" என்பதற்கான குறிப்பீட்டையும் உள்ளடக்குகிறது என இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது. '.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 92அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 92 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச் சட்டவாக்கத்தின் 92அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

'பங்காளர்களால் கணக்காய்வு அறிக்கைகள் கொடுத்துதவப்படுதல், முதலியன.

92அ. (1) வரிமதிப்பீட்டாளரொருவர், பங்குடமையொன்றின் பங்காளரொருவருக்கு அல்லது ஏதேனும் வியாபாரத்தை, தொழிலை, உயர்தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலைக் கொண்டுநடாத்தும் அல்லது பிரயோகிக்கும் வேறெவரேனும் ஆளுக்கு, ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கென அல்லது எந்தக் காலப்பகுதி தொடர்பில் அந்த வரிமதிப்பீட்

டாண்டிற்கான நியதிச்சட்ட முறையான வருமானம் கணிக்கப்படுகிறதோ அந்தக் காலப் பகுதி தொடர்பில், அத்தகைய வியாபாரத்தின், தொழிலின், உயர்தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் கணக்குகள் பற்றிய கூற்றென்றையும், அறிவித்தலொன்றில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்கள் கொண்ட எவையேனும் அட்டவணைகளையும் அந்த வரிமதிப்பீட்டாண்டுக்கெனக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தி எழுத்திலான அந்த அறிவித்தலைக் கொடுக்கலாம்.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, எவரேனும் ஆளினால் கொடுத்துதவப்பட்ட வருமான விபரத்திரட்டொன்றுக்கு ஆதாரமான கணக்குக் கூற்றென்று அங்கீகரிக்கப்பட்ட கணக்காளரொருவரினால் தயாரிக்கப்பட்டுள்ள விடத்து, அத்தகைய கூற்று—

(அ) ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய விபரங்களைக் கொண்டதாகவும் உள்ள, அங்கீகரிக்கப்பட்ட கணக்காளரொருவரின் சான்றிதழொன்றுடனும்; அத்துடன்

(ஆ) கணக்குக் கூற்றுத் தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்களைக் கொண்டவையான அட்டவணைகளுடனும்,

சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக, " அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் " என்பது,—

(அ) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக வுள்ள கணக்காளரொருவர் எனவும்;

(ஆ) " அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி " என்பதன் வரைவிலக்கணத்தின் நோக்கங்களுக்காக ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவரான கணக்காளரொருவர் என; அத்துடன்

(இ) கம்பெனிகள் (கணக்காய்வாளர்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் கணக்காய்வாளரொருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ளவரும் " அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி " என்பதன் வரைவிலக்கணத்தின் நோக்

கங்களுக்காக ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவருமான எவரேனும் தனி ஆள் என,

பொருளாகும்.'.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 96 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 96 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "ஆயிரம் ரூபாவுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாவுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவை மாற்றீடுசெய்தல்.**

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

**" தவணை தவறிய வருக்கான அறிவித்தல்.**

128. (1) ஏதேனும் தவணைதவறிய வரியை, இதனகத்துப் பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் முறையில் அறவிடுவதற்காக நடவடிக்கைகள் எடுப்பதன் முன்னர், ஆணையாளர் தலைமையதிபதி, (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக—

(அ) அத்தகைய வரியின் விபரங்களை, அத்துடன்

(ஆ) அத்தகைய வரியை அறவிடுவதற்கென நடவடிக்கை எடுக்கும் எண்ணம் உள்ளதென்று,

குறிப்பிட்டு எழுத்திலான அறிவித்தலைத் தவணை தவறியவருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் தவணைதவறிய வரியை அறவிடுவதற்கென (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள நடவடிக்கை முறையுடன் இணங்கியொழுகுதல் உகந்ததல்லவெனவும், அத்தகைய வரியை அறவிடுவதற்கென உடனடி நடவடிக்கை அவசியமாகவுள்ளதெனவும் ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படுகின்றவிடத்து, அவ்வுட்பிரிவில் தேவைப்படுத்தப்பட்டவாறு, தவணை தவறியவருக்கு அறிவித்தலொன்றை கொடுக்காமலே அத்தகைய வரியை அறவிடுவதற்கு, அவர் நடவடிக்கைகள் எடுக்கலாம். ஏதேனும் தவணை தவறிய வரியை அறவிடுவதற்கு இப்பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதி நடவடிக்கைகள் எடுக்கின்றவிடத்து, எந்த வரி தொடர்பில் அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவோ அந்த வரியின் விபரங்களைக் குறிப்பிடுகின்றதும், அத்தகைய நடவடிக்கைகளின் தன்மையைக் குறிப்பிடுகின்றதுமான அறிவித்தலொன்றை, எத்தேதியன்று அவர் அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கின்றாரோ அத்தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் அத்தவணை தவறியவருக்கு அவர் கொடுத்தல் வேண்டும்.

(3) எந்த வரிமதிப்பீடு அல்லது வரிமதிப்பீடுகள் தொடர்பில் அத்தகைய வரி விதிக்கப்பட்டுள்ளதோ அந்த வரிமதிப்பீட்டுக்கு அல்லது வரிமதிப்பீடுகளுக்கு எதிராக உரிய காலத்துக்குள் அத்தகைய தவணை தவறியவர் மேன்முறையீடு செய்யாதுவிட்டிருந்தால், அவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட அறிவித்தற் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக அவ்வாறு விதிக்கப்பட்ட வரிக்கு எதிராக ஆட்சேபனை எதனையும் செய்யலாமென்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதியானவர், 123 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் அத்தகைய ஆட்சேபனையைக் கருத்திற்கெடுத்து அதன்மீதான தனது முடிபைக் கொடுத்தலும் வேண்டும் ; அம்முடிபானது முற்றுனதாதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட எவையேனும் நடவடிக்கைகளின் பயனாக அறவிடப்பட்ட வரியானது, ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் (3) ஆம் உட்பிரிவின் கீழ், தவணைதவறியவரால் செலுத்தப்படற்பாலதெனத் தீர்மானிக்கப்பட்ட வரித்தொகையை விஞ்சியதாயிருக்கின்றவிடத்து, அத்தகைய விஞ்சுதொகையானது 149 ஆம் பிரிவில் உள்ள எது எப்படியிருப்பினும், தவணைதவறியவருக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், இவ்வுட்பிரிவின்கீழான மீளளிப்பு எதுவும், (2) ஆம் உட்பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பயனாக அறவிடப்பட்ட வரியை விஞ்சுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 151 ஆம் பிரிவைத் திருத்துதல்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 151 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவில் "இரண்டாயிரம் ரூபாவுக்கு" என்னும் சொற்கள் இடம்பெறும் இடங்களிலெல்லாம் "ஏழாயிரத்து ஐநூறு ரூபாவுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(ஆ) அப்பிரிவில் "ஐயாயிரம் ரூபாவுக்கு" என்னும் சொற்கள் இடம்பெறும் இடங்களிலெல்லாம் "பத்தாயிரம் ரூபாவுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 157 ஆம் பிரிவைத்திருத்துதல்.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 157 ஆம் பிரிவானது, "உண்ணாட்டரசிறைப் பிரதி ஆணையாளர்களும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உண்ணாட்டு அரசிறைப் பிரதி ஆணையாளர்களும், சிரேட்ட உண்ணாட்டு அரசிறை வரிமதிப்பீட்டாளர்களும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவைத் திருத்துதல்.

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவானது, "வரிமதிப்பீட்டாளர்" என்பதன் வரைவிலக்கணத்தில், "வரிமதிப்பீட்டாளர் ஒருவர் என்று பொருளாகும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வரிமதிப்பீட்டாளர் ஒருவர் என்று பொருளாகும்

என்பதுடன், சிரேட்ட உண்ணாட்டு அரசிறை வரிமதிப்பீட்டாளரொருவரையும் உள்ளடக்கும்;"என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

30. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(i) அதன் II ஆம் பாகத்தில், "1980 எப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கான" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, "1980 எப்பிறில் 1ஆந் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கானதும் அவ்வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்னுறும் மூன்று வரிமதிப்பீட்டாண்டுகளுக்கானதுமான" என்னும் சொல்லமைப்பை இடுவதன்மூலம்; அத்துடன்

(ii) அதன் II ஆம் பாகத்தை உடனடுத்து பின்வரும் பாகத்தை உட்புகுத்துவதன்மூலம் :—

"பாகம் IIஅ

1984 எப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான வருமான வரி வீதம் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:—

வரிமதிக்கற்பாலதான வருமானத்தின் முதல் 6,000 ரூபாவுக்கு $7\frac{1}{2}$ சதவீதம்

வரிமதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 6,000 ரூபாவுக்கு 10 சதவீதம்

வரிமதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 6,000 ரூபாவுக்கு 15 சதவீதம்

வரிமதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 6,000 ரூபாவுக்கு 20 சதவீதம்

வரிமதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 6,000 ரூபாவுக்கு 25 சதவீதம்

வரிமதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 6,000 ரூபாவுக்கு 30 சதவீதம்

வரிமதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 6,000 ரூபாவுக்கு 35 சதவீதம்

வரிமதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 6,000 ரூபாவுக்கு 40 சதவீதம்

வரிமதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 9,000 ரூபாவுக்கு 45 சதவீதம்

வரிமதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 9,000 ரூபாவுக்கு 50 சதவீதம்

வரிமதிக்கற்பாலதான வருமானத்தின் மீதிக்கு 55 சதவீதம்".

நான்காம் பிரிவும் இருபதாம் பிரிவும் கடந்தகாலத்தையும் உள்ளடக்கும் பயனுடையதாதல்.

31. இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவுக்குச் செய்யப்படும் திருத்தமும், அத்துடன் இச்சட்டத்தின் 20 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவுக்குச் செய்யப்படும் திருத்தமும் எல்லா நோக்கங்களுக்காகவும், முதன்மைச் சட்டவாக்கம் தொடங்கிய தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.